**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்**
**ஆத்தூர்**
**------**
**அசல் வழக்கு எண்.37/2022**

**2025 ஆம்** வருடம் ஜுன் மாதம் 30 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின் படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆறுமுகம் | ஜாதி | : | |
| த.பெ | : | அழகர் | தொழில் | : | ஓய்வு, இந்தியன் ரயில் |
| கிராமம் | : | தொப்பம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 64/2025 |
| தேதி | : | 30.06.2025 | | | |

முதல் விசாரணை

நீதிமன்றத்தில் இருந்து ஏற்கனவே அழைப்பாணை வந்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கின் வாதி பெயர் எனக்கு தெரியும். அவர் பெயர் லாட தவசி. வாதி கட்டிட கூலி வேலை செய்கிறார். வாதிக்கு ஒரு மனைவி, 4 பிள்ளைகள் உள்ளார்கள். 4 பிள்ளைகளில் 2 பேர் ஆண், 2 பேர் பெண்கள் ஆவார்கள். நான் தொப்பம்பட்டியில், முத்துமாரியம்மன் கோவில் எதிரில், மேற்குபுறத்தில், சர்வே எண்.219 க்கு பின்னார் சர்வே எண்.220 ல் நான் குடியிருந்து வருகிறேன். என் இடத்திற்கு அருகில் வடக்கில் தான் வாதி குடியிருந்து வருகிறார். வாதி குடியிருந்து வரும் இடத்தில் குழந்தைகள் நல காப்பகம் எதுவும் இல்லை. நான் பிறந்தது முதல் 64 வருடமாக மேற்படி தொப்பம்பட்டியில் தான் குடியிருந்து வருகிறேன். வாதியின் வீட்டிற்கு அருகிலோ, அல்லது என் வீட்டிற்கு அருகிலோ குழந்தைகள் நல காப்பகம் இல்லை.

ரயில்வேயில் வேலை பார்த்து ஓய்வு பெற்ற பிறகு தொடர்ந்து தொப்பம்பட்டியில் தான் குடியிருந்து வருகிறேன். வாதியின் வீட்டிற்கு தெற்கு பக்கத்தில் பலசரக்கு கடை வைத்துள்ளேன்.

**7** முதல் **11** பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வாதி உங்கள் உறவினர் என்றால் சரிதான், பங்காளி தான். வாதி எந்த எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார், எவ்வளவு விஸ்தீரனம் என்றால் சர்வே எண்.22 என்று நினைக்கிறேன், விஸ்தீரனம் 20 x 12 அடி இருக்கும். வாதி லாடதவசியின் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்றால் 3 பெண் பிள்ளைகள், ஒரு ஆண் தான் இந்த வாதி. நீங்கள் மேற்சொன்ன விஸ்தீரனம் 20 x 12 அடி இடத்திற்கு பட்டா உள்ளது என்றால் பட்டா உள்ளது. தாவா சொத்து

தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்த விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

உயர்நீதிமன்றத்தில் வாதி ஆக்கிரமிப்பு செய்துள்ள தாவா இடத்தை அகற்ற வேண்டும் என்று உத்தரவு செய்துள்ள விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் கேள்விபட்டுள்ளேன். இந்த வழக்கு யார் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாதி லாடதவசி யார் மீதும் வழக்கு தாக்கல் செய்யவில்லை. உங்கள் ஊரில் குழந்தைகள் காப்பகம், பால்வாடி உள்ளதா என்றால் உள்ளது. தாவா இடத்தில் பால்வாடி இல்லை. உங்கள் ஊரில் பால்வாடி எவ்வளவு நாட்களாக இருந்து வருகிறது என்றால் 30 வருடங்களாக உள்ளது.

காந்திகிராமம், காதி அறக்கட்டளை சார்பாக உங்கள் ஊரில் பால்வாடி நடந்து வந்தது என்றால் 30 வருடத்திற்குள் தான் அது மாதிரி நடந்து வருகிறது. நீங்கள் ஓய்வு பெற்று எவ்வளவு நாட்கள் ஆகிறது என்றால் 15 வருடம் ஆகிறது. பொது இடத்தை யார் ஆக்கிரமிப்பு செய்தாலும், அந்த ஆக்கிரமிப்பை அகற்ற அரசுக்கு அதிகாரம் உள்ளது என்ற விபரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது என்று சாட்சி சாட்சியம் அளித்துவிட்டு அரசுக்கு தேவைப்பட்டால் கொடுக்கும் என்று சாட்சியம் அளிக்கிறார்.

வாதி உங்களுக்கு உறவினர் என்பதால் நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதி இவ்வழக்கில் கேட்ட பரிகாரம் கிடைக்கத்தக்கதல் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

பால்வாடி தாவா இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி உள்ளது என்றால் 200 மீட்டர் தள்ளி உள்ளது. பால்வாடி தற்போது வரை நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான்.

2 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்காக வழக்கு வேறோரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor